**மிஹிந்தலை பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 மார்ச் மாதம் 29 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டதுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மிஹிந்தலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வரிப் பணம் மற்றும் வரிப் பணம் அறவிடல் மற்றும் பட்டியலிடலானது ரூபா 1,191,830 ஆக இருந்த போதிலும் செலவுக் கணக்கின் படி ரூபா 1,672,650 ஆக காட்டப்பட்டு இருந்தமையால் ரூபா 480,820 அதிகமாகக் கணக்கில் காட்டப்பட்டு இருந்தது. | வருடத்திற்கான வருமானமானது சரியாக கணக்கில் இடப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (ii) | கடைக் கூலி மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,644,800 ஆக இருந்த போதிலும் வருமானக் கணக்கின் படி ரூபா 1,964,745 ஆக | வருமானமானது சரியாக கணக்கில் பதியப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டமையால் ரூபா 680,055 குறைவாக கணக்கில் இடப்பட்டு இருந்தது. | | |
| (iii) | பிடியாணை மற்றும் தண்டப் பணம் ரூபா 360,321 அதிகமாக கணக்கிடப்பட்டு இருந்தது. | வருமானமானது சரியாக கணக்கில் பதியப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| ( iv) | 2015 ஆம் ஆண்டிற்கான கிடைக்கப்பெற்ற ரூபா 1,677,600 மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கில் பதியப்பட்டு இருந்தது. | வருமானமானது சரியாக கணக்கில் பதியப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (v) | பொது நடப்புக் கணக்கில் இருந்து தேசிய கடன் நடப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பணம் ரூபா601,767 ஆனது முலதனச் சொத்து விற்பனை பெறுவனவு மற்றும் கடன் மீளச் செலுத்தல் என கணக்கில் பதியப்பட்டு இருந்தது. | நடப்புக் கணக்குகளிடையிலான மாற்றத்தினை அடையாளங் கண்டு சரியாக கணக்கில் பதியப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (vi). | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் தொடர்பில் நிதி ஏற்பாடுகள் காணப்படவில்லை. | நிதி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணக்கிற்கு கொண்டு வரப்பட்ட ஆரம்ப மீதி மற்றும் 2017 ஆம் ஆண்டில் சான்றுப்படுத்தப்பட்ட இறுதிக் கணக்கின் இறுதி மீதிக்கும் இடையில் 18 கணக்கீட்டு விடயங்களுக்கான ரூபா 40,086,976 வித்தியாசம் காணப்பட்டது. | சான்றுப்படுத்தப்பட்ட நிதிக் கணக்குகளில் இறுதி மீதி அடுத்த வருடத்தின் நிதிக் கணக்குகளின் ஆரம்ப மீதியாக எடுக்கப்பட வேண்டும் | முன்வைக்கப்படவில்லை |
| (ii) | 05 கணக்கு மீதிக ளுக்கான கணக்கு மற்றும் குறித்த பதிவுகளிடையே ரூபா 2,397,627 வித்தியாசம் காணப்பட்டு இருந்தது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை ஒப்பிட்டு சரிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (iii) | 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு பிரதான நாளேட்டின் 22 | பிரதான நாளேட்டின் கணக்குகளின் மீதிகள் கணக்குப் | முன்வைக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளின் மீதி மற்றும் அன்றைய தினத்திலான மீதிப் பரிசோதனையில் அக் கணக்குகளிற்கான பெறுமதிக்கம் இடையில் ரூபா 38,225,360 வித்தியாசம் காணப்பட்டது. | பரிசோதனையில் காட்டப்பட வேண்டும். | |
| (iv) | மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 ஆம் திகதியில் 07 கணக்கீட்டு விடயங்களுக்கான மீதிப் பரிசோதனை மற்றும் நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிக்கும் இடையில் ரூபா14,181,717 வித்தியாசம் காணப்படுகிறது. | மீதிப் பரிசோதனையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியானது நிதி அறிக்கைகளில் காட்டப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (v) | மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 ஆம் திகதியில் மீதிப் பரிசோதனையின் வரவு மொத்தம் ரூபா 411,284,411 மற்றும் செலவு மொத்தம் ரூபா 414,341,336 ஆக இருந்ததுடன் ரூபா 3,056,925 வித்தியாசம் காணப்பட்டது. | மீதிப் பரிசோதனையின் வரவு செலவு மொத்தம் சமமாக காணப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| (vi) | 2018 ஜனவரி 01 திகதிக்கு ரூபா 12,730,178 நிதியத்தின் கணக்கு மீதிக்கு வருடத்திற்கான ரூபா 3,056,924 குறைபாட்டினை இணக்கம் செய்ததன் பின்பு கணக்கு மீதி ரூபா 9,673,254 ஆக அமைய வேண்டுமாயினும் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையில் ரூபா 7,288,898 என காட்டப்பட்டு இருந்தமையால் ரூபா 2,384,356 வித்தியாசம் காணப்பட்டது. | சரியாக இணக்கம் செய்யப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அறவிடப்பட வேண்டிய 5 கணக்கு மீதிகளுக்கான ரூபா 1,002,239 ஆனது 5 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் உள்ளன. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 05 தொடக்கம் 07 வருட காலங்களாக கணக்குகளில் காணப்பட்ட ரூபா 1,209,806 ஆன 08 கணக்கு மீதிகள் தீர்க்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 147,092,218 பெறுமதியுடைய 17 கணக்கு விடயங்களுக்கான சொத்துப் பதிவுகள், உரித்துச் சான்றிதழ், விவரிக்கப்பட்ட அட்டவணைகள், ஆய்வுச் சபை அறிக்கை என்பவற்றை முன்வைக்காமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமான முறையில் சரிபார்க்க முடியவில்லை. | நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்து மூல சாட்சிகளை முன்வைக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதிக் கோவை- | | | |
| | விதி 217 மற்றும் 218 | சபையின் நிலம் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் பதிவுகள் காணப்படவில்லை என்பதுடன் அனைத்து நிலங்கள் மற்றும் | ஒழுங்கு விதிகளுக்க அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்கள் வருடத்திற்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட்டு இருக்கவில்லை. | | |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

-----------------------------

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபையின் 12 வாகனங்களினதும் எரிபொருள் தகனத்தை பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய இல IAI/2002/02 உடைய கருவூல சுற்றறிக்கை | கணனி, வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடு பேணப்படவில்லை. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,560,205 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,618,435 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 968,750 | 1,191,830 | 983,210 | 480,820 | 1,090,750 | 1,418,180 | 1,145,980 | 272,200 |
| (ii) | வாடகை | 10,351,048 | 11,157,048 | 10,866,816 | 912,877 | 9,055,993 | 11,996,542 | 11,373,697 | 622,645 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 3,783,552 | 17,506,500 | 17,506,500 | - | 2,620,232 | 2,924,451 | 2,924,451 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,789,800 | 1,325,166 | 5,595,844 | 5,010,697 | 1,489,750 | 1,485,822 | 2,052,487 | 8,981,378 |
| | | 16,893,150 | 31,180,544 | 34,952,370 | 6,404,394 | 14,256,725 | 17,824,995 | 17,496,615 | 9,876,223 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டறைச் சட்டத்தின் பிரிவு 134(i) படி சபையின் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தை பிரகடனப்படுத்தி வருடாந்த சொத்து மதிப்பொன்றைச் செய்து மதிப்பீட்டு வரி சுமத்தப்பட்டு இருக்கவில்லை. | மதிப்பீட்டு வரி சுமத்தப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

### 2.2.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 41 கடைகளின் கூலியானது 2009 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டிற்கும் அறவிடப்பட்டது. | 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட்டு கூலி அறவிடப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதி 59 - 66 வரையான விதிகளின் அடிப்படையில் வியாபார அனுமதிப்பத்திரம், கைத்தொழில் வரி, தொழில்துறை வரி என்பவற்றை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பில் ஆய்வொன்றினை நடாத்தி வருமானத்தினை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஒழுங்குவிதி அமைவாக வருமானம் அறவிடப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

2.2.5 **ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிடியாணை தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தொடர்பில் முறையான பதிவேடுகள் காணப்படவில்லை என்பதுடன் முன்னைய 02 வருடங்களுக்குமான அறவிடப்பட வேண்டிய பிடியாணை தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அடையாளங் காணப்பட்டு இருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானத்தை சரியாக அடையாளங் கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பிலான முறையான நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு,

மக்களின் நலன், வசதி மற்றும் பொது நலன் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களை நிறைவேற்றல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கு இடைக்கால ஒழுங்கு விதிகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இடைக்கால ஒழுங்குவிதிகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கவில்லை. | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யபடல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(இ) கைவிடப்பட்ட பணிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித் திட்டம் 2018 இன் கீழ் ரூபா 995,000 பெறுமதியுடைய மரதன்கல்ல தொடியாய கடுபொத நாற்சந்தியில் இருந்து கடுபொத பன்சல வரையிலான பாதை மீற்றர் 100 வரை கற் தளங்களை | திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்கும் திட்டமானது கைவிடப்பட்டு இருந்தது. | | |
| (ii) | நூலகம் மற்றும் கேட்போர் கூடத்தினை நிர்மாணிப்பதற்கு தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 11,996,091 இனைப் பெற்றிருந்ததுடன் குறித்த தவணைப் பணமானது இது வரைக்கும் செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும் கேட்போர் கூடம் இதுரையில் நிர்மாணிக்கப்படவில்லை. | கடன் பணமானது குறித்த செயற்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேகரிக்கப்படுகின்ற குப்பை கூளங்களை வகைப்படுத்தாது கல்மடுவ பொதான இஹல மடுவ பிரதேசத்தில் உள்ள இடமொன்றில் குவித்து பின்னர் புதைப்பதால் சுற்றாடலுக்கும் வன விலங்குகளுக்கும் பாரிய தாக்கங்கள் ஏற்படுகின்றது. | திண்மக் கழிவுகள் மற்றும் கழிவு முகாமைத்துவமானது சுற்றாடலுக்கு பாதிப்பற்ற முறையில் செய்யப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 அம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் திரசர அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபையானது சரியான விதத்தில் | திரசர அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை அடையாளங் கண்டு அவ் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

அறிவுறுத்தப்பட்டு இருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கும் மேலதிகமாக அறவிடப்படாமல் இருக்கின்ற ரூபா 59,918 கடன் மீதி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | தொழிலாளர் கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**3.3 சொத்து முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 05 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் 10 வாகனங்களின் உரித்து சபையினால் பெறப்பட்டு இருக்கவில்லை. மேலும் பாவனைக்கு உகந்த நிலையில் காணப்படும் 10 வாகனங்களுக்கு காப்புறுதியும் பெறப்பட்டு இருக்கவில்லை. | வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு காப்புறுதி மேவுகை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் | முன்வைக்கப்படவில்லை |

**3.3.2 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 1,340,000 பெறுமதியான 03 சொத்துக்கள் தொகுதிகள் 5 | பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்த அல்லது | முன்வைக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| வருடங்களாக வீணாக்கப்பட்டு இருந்தது. | பாவனைக்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

**3.4 பெறுகை**

**---------------**

**பெறுகை திட்டம்**

**----------------------**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுகை திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. | பெறுகை திட்டம் எதுவும் தயாரிக்கப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய இல DMA/ 2009 (1)(i) உடைய முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டும். | முன்வைக்கப்படவில்லை |